செ.வெ.எண்: 588 நாள்: 27.10.2024

**திருநெல்வேலி மாவட்டம்**

**மாவட்ட எரிவாயு நுகர்வோர் குறைதீர்வு நாள் கூட்டம்**

**நடைபெற உள்ளது என மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் தகவல்**

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அனைத்து எரிவாயு நுகர்வோர்களுக்கு எரிவாயு உருளை பதிவு செய்வதில் ஏற்படும் குறைபாடுகள்/தடங்கல்கள் மற்றும் எரிவாயு உருளைகள் வழங்குவதில் காலதாமதம் குறித்து நுகர்வோர்கள் தங்கள் குறைகளைப் பதிவு செய்து நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக அனைத்து எண்ணெய் நிறுவன எரிவாயு முகவர்கள், மாவட்ட எரிவாயு ஒருங்கிணைப்பாளர் மற்றும் எரிவாயு நுகர்வோர்கள் கலந்து கொள்ளும் **எரிவாயு நுகர்வோர் குறைதீர்வு கூட்டம் 29.10.2024 (செவ்வாய்) அன்று மாலை 5.00 மணியளவில்** திருநெல்வேலி, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் **திருநெல்வேலி, மாவட்ட வருவாய் அலுவலர்** அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டு எரிவாயு நுகர்வோர்கள் தங்கள் குறைகளை தெரிவிக்குமாறு மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.சுகன்யா, அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.**